வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 9200 / ஆ 5/ 2020 நாள 16–06–2020

பொருள் : தேர்வுகள் – வேலூர் ஒருங்கிணைந்த மாவட்டம் – மேல்நிலை இரண்டாமாண்டு மறுதேர்வு – மாணவர்களிடமிருந்து விருப்பக்கடிதம் பெறுதல் – தொடர்பாக.

பார்வை சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் (பொ) அவர்களின் கடித ந.க.எண் 127311 /எச்1/2020 நாள் 16–06–2020

••••••

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ஆணையின்படி வேலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு / நகரவை / நிதியுதவி / ஆதிதிராவிட நல மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் பின்வரும் அறிவுரையினை பின்பற்றி செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பயின்று 24.03.2020 அன்று நடைபெற்ற வேதியியல், கணக்கு பதிவியல், புவியியல் பாடங்களுக்கான மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வினை எழுதாத மாணவர்களிடம் இருந்து தற்போது வேதியியல், கணக்கு பதிவியல், புவியியல் பாடங்களுக்கான மறுதேர்வு எழுதுவதற்கான விருப்பக்கடிதத்தினை (Willing Letter) 24.06.2020 தேதிக்குள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அக்கடிதத்தில் மாணவரது பெயர், தேர்வெண் மற்றும் தேர்வு மைய எண் ஆகிய விவரங்கள் கண்டிப்பாக இடம் பெற வேண்டும்.

2. அவ்வாறு பெறப்படும் விருப்பக் கடிதங்களை தேர்வெண் வாரியாக அடுக்கி 26.06.2020 தேதிக்குள் வேலூர் கல்புதூர் அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்து அரசு / நகரவை / நிதியுதவி / ஆதிதிராவிட நல மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் , திருப்பத்தூர், இராணிப்பேட்டை , அரக்கோணம், வாணியம்பாடி அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
3. வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.